# திருத்துறைப்பூண்டி நகராட்சி

## <u>அவசரக் கூட்ட அறிக்கை</u>

திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 22–05–2018 செவ்வாய் கிழமை மாலை 3.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்படும் அவசரக் கூட்ட அறிக்கை.

இடம்: திருத்துறைப்பூண்டி
நாள்: 22–05–2018

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

### பொருள் எண் 1 :

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்டம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின் படி திருத்துறைப்பூண்டி நகராட்சியில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் போக மீதமுள்ள இணைப்புகளுக்கு மதிப்பீடு தயார் செய்து கருத்துரு அனுப்ப கேட்டதின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்நிதியை தமிழ்நாடு நகர்ப்புற சேவை கட்டமைப்பு நிதி இணையம் (TUFIDCO) மூலம் வட்டி இல்லா கடனாக பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கிட நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| நகராட்சியின் மொத்த வரிவிதிப்புகள் | – | 8348 |
| நகராட்சியின் மொத்த வீடுகள் | – | 6255 |
| வழங்கப்பட வேண்டிய மொத்த இணைப்புகள் | – | 5697 |
| ஏற்கனவே உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் | – | 2269 |
| தற்போது வழங்க வேண்டிய குடிநீர் இணைப்புகள் | – | 2968 |
| மதிப்பீட்டு தொகை | – | ரூ.98.00 இலட்சம் |

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**
**ந.க.எண்.1596/2018/இ1**

### பொருள் எண் 2 :

திருத்துறைப்பூண்டி நகராட்சி பகுதியில் வேதாரண்யம் சாலையில் உரக்கிடங்கு அமைந்துள்ளது. மேற்கண்ட உரக்கிடங்கு கடந்த 50 ஆண்டுகளாக குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு மலை போல் குவிந்துள்ளது. மேற்கண்ட குப்பைகள் இரண்டு ஏக்கர் நிலத்தில் கொட்டப்பட்டு வருகிறது. அப்பகுதியினை சுற்றிலும் குடியிருப்புகள் அமைந்துள்ளதால் அக்குப்பைகளை சுத்திகரிப்பு செய்து அகற்ற (Bio-mining ) தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.110.00இலட்சமாகும். மேற்கண்ட பணியினை எடுத்து செய்ய ஆகும் தொகையினை அரசு மான்யத்தில் மேற்கொள்ளவும் அதற்கான கருத்துருவை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.545/2017/இ1)

## பொருள் எண் 3 :

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக இந்நகராட்சிக்கு வழங்கப்படும் குடிநீர் கட்டணம் **01.12.2017** முதல் **1000** லிட்டருக்கு ரூ.**4.50** ஆக உள்ளதை உயர்த்தி ரூ.**9.00/–** ஆகவும், **01.04.2018** முதல் ஆண்டு ஒன்றுக்கு **5** சதவீதம் உயர்வு செய்து **1000** லிட்டருக்கு ரூ.**9/–** ஆக உள்ளதை ரூ.**9.45/–** ஆக உயர்வு செய்தும்,

அதற்கான **1.12.2017** முதல் **31.3.2018** வரையில் கணக்கீடு செய்து நிலுவைத் தொகை ரூ.**812192/–** செலுத்துமாறும் தெரிவித்து வரப்பெற்றுள்ள BA/F Muncipality W.C./2017-18 RWS/TVR **03.04.2018** தேதியிட்ட செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருவாரூர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:**

1. பதிவு செய்யலாம்
2. நகராட்சியின் நிதிநிலையை பொறுத்து தொகையை செலுத்திட அனுமதிக்கலாம்.

**(ந..கஎண்.1439/2018/இ2)**

## பொருள் எண் 4:

தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திலிருந்து இந்நகராட்சிக்கு வழங்கப்படும் குடிநீர் **1000** லிட்டருக்கு கட்டணமாக ரூ.**4.50** வசூலித்ததை **1.12.2017** முதல் **31.03.2018** வரை ரூ.**9.00** ஆக உயர்வு செய்தும், **01.04.2018** முதல் கட்டணத்தில் ஆண்டு ஒன்றுக்கு **5** சதவீதம் உயர்வு செய்து, ரூ.**9.00** ஆக உள்ள கட்டணத்தினை ரூ.**9.45** ஆக உயர்த்தி வசூலிக்கவும், ஐந்து ஆண்டுகளுக்கு தொடர்ந்து உயர்வு செய்து வசூலிக்கவும் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.**39** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை **(கு.நீ.2)** நாள் **17.04.2018** நகர் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந..கஎண்.1439/2018/இ2)**

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

.

## திருத்துறைப்பூண்டி நகராட்சி

## <u>இயல்பு கூட்ட அறிக்கை</u>

திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 30–05–2018 புதன் கிழமை மாலை 3.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்படும் இயல்பு கூட்ட அறிக்கை.

இடம்: திருத்துறைப்பூண்டி
நாள்: 30–05–2018

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

**பொருள் எண் 1 :**

நகராட்சி ஆணையர் அவர்களின் மே–2018 மாதத்தின் நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**பொருள் எண் 2:**

2018–19ம் ஆண்டிற்கு இந்நகராட்சியின் அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான படிவங்கள், கணிணி உபகரணங்கள், கேட்பு அறிவிப்புகள், எழுதுபொருட்கள் தொடர்புடைய இதர பொருட்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் தொகை ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அரசால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து அலுவலக தேவைக்கேற்ப வாங்கி கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந..களண்.1536/2018/டி2)**

**பொருள் எண் 3:**

இந்நகராட்சியின்2018–19ம் ஆண்டிற்கு குடிநீர் உபகரணங்கள் சப்ளை செய்வதற்கு 11.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி தொகை | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | எழில் எண்டர்பிரைசஸ், திருத்துறைப்பூண்டி | 499816.10 | 499691.30 | 0.02% குறைவு |
| 2 | பவானி ஏஜென்ஸீஸ், திருத்துறைப்பூண்டி | | 503714.00 | 0.77% அதிகம் |

அலுவலக குறிப்பு :

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.02% சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள எழில் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்,

**(ந.களண்.1181/2018/இ1)**

## பொருள் எண்4:

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான பல்வகைப்பட்ட குத்தகை இனங்களுக்கு 2018–19 ஆம் ஆண்டு முதல் 2010–21 வரையுள்ள காலங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் மற்றும் பலன்களை அனுபவிக்கும் உரிமையாணைகளை பற்றிய பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரிட இந்நகர்மன்ற தீர்மானம் எண் 212 நாள் 29.12.2017–ல் அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பிரிண்ட் செய்து வழங்கும் பணிக்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் (24 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தக வடிவில்) கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | குத்தகை இனம் | புத்தகம் 1–க்கு தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ராஜம் பிரிண்டர்ஸ், திருவாரூர் ரோடு, திருத்துறைப்பூண்டி | 65.00 |
| 2. | ஜெனி பிரிண்டர்ஸ், ஆர்.எஸ். ரோடு, திருத்துறைப்பூண்டி | 70.00 |
| 3. | எம்.வி.கே. ஆப்செட் பிரிண்டர்ஸ், டி.எம்.சி. ரோடு, திருத்துறைப்பூண்டி | 68.00 |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண் 1 ராஜம் பிரிண்டர்ஸ், திருத்துறைப்பூண்டி நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**(ந..கஎண்.6966/2017/அ2)**

## பொருள் எண் 5:

அரசாணை எண் 11 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 12.01.1999ன்படி வகுக்கப்பட்டுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் பேரூராட்சிகள் தொழில் வரி சட்டம் 1999 விதி 16ன்கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தொழில் வரி விகிதத்தை குறைந்தபட்சம் 25% சதவீதமும் 35% சதவீதத்திற்கு மிகாமலும் உயர்வு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கடந்த 1.10.2013 முதல் நகர் மன்றத்தால் தொழில் வரி , 25% சதவீதம் உயர்வு செய்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது ஐந்து வருடங்கள் முடிந்த நிலையில் 1.10.2018 முதல் தொழில் வரி உயர்வு செய்து வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

### 01.10.2013ன்படி தொழில் வரி விபரம்

| வ.எண் | ஆறு மாத சராசரி வருமானம் | 1.10.2013 முதல் நிர்ணயம் செய்துள்ள தொழில் வரி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 21,000 வரை | வரியில்லை |
| 2. | 21,001 முதல் 30,000 வரை | 120/- |
| 3. | 30,001 முதல் 45,000 வரை | 300/- |
| 4. | 45,001 முதல் 60,000 வரை | 590/- |
| 5. | 60,001 முதல் 75,000 வரை | 890/- |
| 6. | 75,001 முதல் அதற்கு மேல் | 1180/- |

எனவே, அரசாணை எண் 11–ன்படி தற்போதுள்ள தொழில் வரி விகிதத்திலிருந்து குறைந்தபட்சம் 25% சதவீதமும், 35% சதவீதத்திற்கு மிகாமலும் மேலும் ஓராண்டுக்கு ரூ.2500/– வரை நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றம் முடிவு செய்யலாம்.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. நகாட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12503/2018/ஆர்.1 நாள் 21.05.2018–ல் ஓராண்டுக்கு ரூ.2500/–க்கு மேல் நிர்ணயம் செய்யக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளதால், இந்நகராட்சி தொழில் வரி அட்டவணை வரிசை எண் 6–ல் ரூ.75,001/–க்கு மேல் உள்ள ரூ.1180/–க்கு 25% சதவீதம் உயர்வு செய்வதால் ரூ.1480/– என வருவதை வரையறை செய்யப்பட்ட தொகை ரூ.1250/– என நிர்ணயம் செய்யலாம்.
3. தொழில் வரி தொகை திருத்தம் குறித்து, தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் ஆகும் செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1681/2018/அ1)

## பொருள் எண் 6:

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட வேதாரண்யம் சாலையில் அமைந்துள்ள ஆட்டுச்சந்தையினை முகைதீன் ஆண்டவர் ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகம் தொடர்ந்து நடத்திக் கொள்வதற்கு சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் 29464/2012 மற்றும் M.P.No.01/2012–ன் தீர்ப்பாணையின்படி மேற்கண்ட நிர்வாகத்திடம் 25.04.2018–ஆம் தேதியன்று பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டியதால் 2003–04 ஆம் ஆண்டிற்கு ஆண்டு வருமானத்தில் 15% சதவீதம் கேட்பு தொகையாக ரூ.3600/– எழுப்பப்பட்டு அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007–ன்படி மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை செலுத்தி வரப்பெற்ற லெவி தொகையில் 15% உயர்வு செய்து 2003–04 முதல் 2017–18 வரையுள்ள ஆண்டுகளுக்கு தொகை ரூ.72816/– வசூல் செய்யப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களுக்கு குத்தகை விதிமுறைகளை பின்பற்றி ஆட்டுச்சந்தையினை தொடர்ந்து நடத்திக்கொள்வதற்கு முகைதீன் ஆண்டவர் ஜும் ஆ பள்ளிவாசல் நிர்வாகத்திற்கு அனுமதி வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. 2003–04 முதல் 2017–18 வரையுள்ள ஆண்டுகளுக்கு வசூல் செய்த தொகைக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
3. அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007–ன்படி மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15% உயர்வு செய்து வசூலிக்கவும் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந..கஎண்.5649/2012/அ2)**

## பொருள் எண் 7:

இந்நகராட்சியின் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள இலவச கழிப்பறையில் உள்ள பழுதுகளை சரிபார்க்கவும், பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.60,000/– மதிப்பீட்டில் அமைக்கவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 1807/ 2018/இ1**

## பொருள் எண் 8:

இந்நகராட்சி வார்டு எண்.1 மன்னை சாலையில் உள்ள வாம்பே கழிவறையில் உள்ள பழுதுகளை சரிபார்க்கவும், பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.40,000/– மதிப்பீட்டில் அமைக்கவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 1806/ 2018/இ1**

**பொருள் எண் 9:**

இந்நகராட்சி வார்டு எண்.6 அரசலடி தெருவில் அமைந்துள்ள சமுதாய கழிப்பறையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிபார்க்கவும், பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.60,000/– மதிப்பீட்டில் அமைக்கவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 1808/ 2018/இ1**

**பொருள் எண் 10:**

இந்நகராட்சி வார்டு எண்.13 அபிஷேக கட்டளை தெருவில் உள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகத்திலுள்ள பழுதான கழிவறைகளை சரிசெய்யவும், பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.46,000/– மதிப்பீட்டில் அமைக்கவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 1809/ 2018/இ1**

**பொருள் எண் 11:**

இந்நகராட்சி வார்டு எண்.21 பெரியநாயகிபுரம் பகுதியில் உள்ள வாம்பே கழிவறையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யவும், பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.55,000/– மதிப்பீட்டில் அமைக்கவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 1810/ 2018/இ1**

**பொருள் எண் 12:**

இந்நகராட்சி வார்டு எண்.16 ரொக்கக்குத்தகை பகுதியில் புதியதாக பைப் லைன் ரூ.2,00,000/– மதிப்பீட்டில் அமைக்கவும், இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 1179 / 2018/இ1**

**பொருள் எண் 13:**

இந்நகராட்சியின் ஈப்பு வாகனம் த.நா.50ஆர்–1074–க்கு ஆயில் சர்வீஸ் மற்றும் பழுதுகள் மேற்கொண்டதற்கான கட்டணம் ரூ.32697/– சிவா ஆட்டோமொபைல்ஸ் திருச்சி நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 383/ 2011/இ1**

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

.